# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com



வியாழக்கிழமை 18.08.2022 | supeedsam.com | supeedsam@gmail.com


# பிளவடைகின்றது சஜித் அணி

## ரணில் பக்கம் தாவப் பலர் தயார்: தமிழ், முஸ்லிம் எம்.பிக்களும் உள்ளடக்கம்

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணியிலிருந்து 20 இற்கும் மேற்பட்டோர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைய இதுவரை இணக்கம் தெரிவித்துள்ளனர். அவர்களுள் தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குகின்றனர்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:– எதிரணியில் இருந்து வரும் உறுப்பினர்களையும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு பலமான அரசை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறுவவுள்ளார்.

அந்த அரசுக்கு சர்வகட்சி அரசு, சர்வகட்சி ஆட்சி, தேசிய அரசு ஆகிய மூன்று பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. எனவே, பலமிக்க அரசுக்கு இந்த மூன்று பெயர்களில் ஒரு பெயரை அதில் அங்கம் வகிக்கவுள்ள உறுப்பினர்களின்

02 ஆம் பக்கத்தில்...

## 'இராஜதந்திர மார்க்கமாக' கோட்டாபய நாடு திரும்புவார்



மக்களின் எதிர்ப்புக்கு மத்தியில் நாட்டிலிருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, CNN செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ நாடு திரும்புவதில் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எந்த ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், அவர் இராஜதந்திர மார்க்கமாக நாடு திரும்புவார் எனவும் அமைச்சர் கூறினார்.

02 ஆம் பக்கத்தில்...

## சஜித் அணியை உடைப்பதே ரணிலின் இலக்கு



ஐக்கிய மக்கள் சக்தியை இரண்டாக பிளவுபடுத்துவதே ரணில் விக்கிரமசிங்கவின் இலக்காக இருக்கின்றது – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திர தெரிவித்தார்.

இந்நிலையில், கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே ஹிருணிக்கா இவ்வாறு குறிப்பிட்டார். சிறிகொத்த மீது இடம்பெற்ற கல்வீச்சு தாக்குதல், ஐக்கிய தேசியக் கட்சி பிளவு பட்டு புதிய கட்சி உதயமானது, வீடு எரிக்கப்பட்டமை ஆகிய மூன்று சம்பவங்கள் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க கடும் சீற்றத்தில் உள்ளார். பழி தீர்க்க வேண்டும் என எண்ணுகிறார்.

ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்திய பின்னரே அவர் நிம்மதி அடைவார்.

மேலும், அதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் திட்டமிட்ட அடிப்படையில் வேட்டையாடப்படுகின்றனர். அவர்களை பாசிசவாதிகளாகக் காண்பிப்பதற்கே முயற்சி எடுக்கப்படுகின்றது. எனவும் ஹிருணிக்கா குறிப்பிட்டார்.

## புதிய அரசியல் கூட்டணியின் தலைவராக விமல்



நாடாளுமன்றத்தில் சுயாதீனக் கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கிய புதிய கூட்டணியின் தலைவராக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நியமிக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இதனை ஊடகங்களிடம் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச தலைமையிலான புதிய கூட்டணி எதிர்வரும் 4 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டணியில் 8 சுயாதீனக் கட்சிகள் ஒன்றிணையும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மேலும் கூறினார்.

## பலதும் பத்தும் பார்த்தே தடையை நீக்கினோம்

முறையான – ஆழமான தகவல் ஆய்வு மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் 316 தனிநபர்களையும், 6 நிறுவனங்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் புதிதாக அடையாளங்காணப்பட்ட 55 நபர்கள் மற்றும் 3 அமைப்புகள் உள்ளிட்ட 316 நபர்கள் மற்றும் 15 அமைப்புகள் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி ஊடாக தடைசெய்யப்பட்ட பட்டியலில் சேர்க்கப்பட்டுமுள்ளன.

– இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையில் அந்தப் பொறிமுறை தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெளிவுபடுத்தியுள்ளது.

அந்த விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தடைநீக்கப் பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான விசாரணைகள் கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டன.

நாட்டுக்குள் அல்லது நாட்டுக்கு வெளியில் வாழும் அல்லது பயங்கரவாத அல்லது தீவிரவாத அமைப்புகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய நபர்கள், அதற்குரிய நிதி, சொத்துக்கள், பயங்கரவாதச் செயல்கள் அல்லது தீவிரவாதச் செயல்களுக்கு

02 ஆம் பக்கத்தில்...

## 2024 இல் மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில்



2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் களமிறக்குவது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் குரல்கள் ஒலித்து வருகின்றன.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் 2ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி மாநாட்டை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் மஹிந்த ராஜபக்சவைத் தொடர்ந்து கட்சியின் தலைவராகவும், நாமல் ராஜபக்சவை கட்சியின் தேசிய அமைப்பாளராகவும் நியமிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பஸில் ராஜபக்சவுக்கும், கோட்டாபாய ராஜபக்சவுக்கும் இம்முறை எவ்விதமான பதவிகளும் வழங்கப்படமாட்டாது என்று கூறப்படுகின்றது.

மேலும், சர்வகட்சி அரசில் எந்தப் பதவியையும் பெற்றுக்கொள்ளாமல், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை மறுசீரமைக்கும் நடவடிக்கையில் நாமல் தற்போது அதிக கவனம் செலுத்தி வருகின்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2030ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு நாமல் இவற்றையெல்லாம் செய்து வருகின்றார் என்றும் கூறப்படுகின்றது.

நாமல் ஏற்கனவே தனது ஜனாதிபதிக் கனவை நனவாக்க மற்றொரு மாபெரும் யுக்தியை மேற்கொண்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடைநீக்கம் தேசத்துரோக செயல்

ஜனாதிபதி தனது இருப்பதை தக்கவைத்துக்கொள்வதற்காகவே தமிழ் அமைப்புகளின் தடையை நீக்கியுள்ளார். இதனை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம் அத்துடன் இது தேசத்துராகே செயலாகும் என தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் குணதாச அமரசிங்க தெரிவித்தார்.

தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

டயஸ்போராவுடன் சம்பந்தப்பட்ட 6 அமைப்புகளுக்கான தடையை நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தீர்மானித்திருக்கின்றார்

பெற்றோலை 250 ரூபாய்க்கு வழங்க முடியும்

உலக சந்தையில் எரிபொருள் விலையைப் பார்க்கும்போது உள்நாட்டில் பெற்றோல் லீற்றரை 250 ரூபாய்க்கு வழங்க முடியும் என, பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிபொருளின் விலை கடந்த காலங்களில் பாரியளவில் அதிகரித்திருந்தாலும், பெரல் ஒன்றின் விலை 120 டொலரில் இருந்து 90 டொலராக குறைவடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## நாமலுக்கு அமைச்சு பதவி வழங்க கூடாது!

### பிளக்கெப் எதிர்ப்பு

சர்வகட்சி அரசாங்கத்தில் நாமலுக்கு அமைச்சு பதவி வழங்க கூடாது என பிளக் கெப் மூமென்ட் அமைப்பினர் இன்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளனர்.

சர்வகட்சி அரசாங்கம் அமைப்பதுடன், அதில் நாமல் ராஜபக்சவிற்கு அமைச்சு பதவி வழங்கப்படும் என தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் நாமல் ராஜபக்சவிற்கு அமைச்சு பதவி வழங்க கூடாது என எதிர்ப்பு தெரிவித்து காலிமுகத்திடல் போராட்டக்களத்தில் முன்னோடியாக செயற்பட்ட பிளக் கெப் மூமென்ட் அமைப்பினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

# ஆளுநர் நியமனங்களைவிட மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவதே முதன்மையானது

இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையை இலங்கை பின்பற்ற வேண்டும் என்றும் ஆளுநர்கள் நியமனத்தை விட மாகாண ஆட்சியை நிறுவுவதற்கான நகர்வுகள் சம்பந்தமாக கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், ஆளுநர் நியமனம் சம்பந்தமாக ஐக்கிய தேசியக்கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் கருத்து மோதல் ஏற்பட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய நிலையில், ஆளுநர் நியமனங்களைவிட, மாகாணத்தில் மக்கள் ஆட்சியை ஏற்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக மாகாணங்களுக்கான அதிகாரம் என்பது ஆளுநர் ஊடாக அல்லாமல், மக்கள் ஊடாக தெரிவுசெய்யப்படும் முதல்வர் ஊடாகவே கையாளப்பட வேண்டும்.

அதிகாரங்களை முழுமையாக பகிரும் வகையில் 13 ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுலாக வேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை முழுமையாக அமுல்படுத்தாமல் இழுத்தடிக்கும் இலங்கை, தற்போது சீன கப்பலையும் நாட்டுக்குள் அனுமதித்துள்ளது.

எது எப்படி இருந்தாலும் இந்தியாவை அனுசரித்து செல்லும் அணுகுமுறையையே இலங்கை பின்பற்ற வேண்டும் - என்றார்.

# வடக்கில் ஆளுநரின் அடாவடி தொடர்கின்றது

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட நிர்வாக அதிகாரிகள் சிலருக்கு இடமாற்ற உத்தரவுகள் ஆளுநர் ஜீவன் தியாகராஜாவால் வழங்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் கல்வி அமைச்சின் மூத்த உதவிச் செயலராகவும், உள்ளூராட்சி அமைச்சின் பதில் செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்த மு.நந்தகோபாலன் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி தேவநந்தினி பாபு கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.



மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளராக செ.பிரணவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 24ஆம் திகதியிலிருந்து இடமாற்றங்கள் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வசந்த முதலிகே கைது

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே கைது செய்யப்பட்டுள்ளார்.

வசந்த முதலிகே உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரின் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது.



கொழும்பு - யூனியன் பிளேஸ் பகுதியில் பேரணியில் ஈடுபட்டு திரும்பிய போது, கொழும்பு ஐந்துலாம்பு சந்தியில் வைத்து அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அனைத்து பல்கலைக்கழக மாணவ ஒன்றிய மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தினை கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிமைக்காக கொழும்புக்கு செல்வோம் எனும் தொணிப்பொருளில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. அடக்குமுறையை நிறுத்துவதுடன், கைது செய்யப்பட்ட அனைத்து போராட்டக்காரர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு இதன்போது வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்துடன், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உடனடியாக இரத்து செய், மக்கள் சக்தியை உறுதிப்படுத்தும் புதிய அரசியலமைப்புக்காகப் போராடுவோம்,

இனி கடன் இல்லை, திருடப்பட்ட பணத்தை கொடு, பொருட்களின் விலை-வரிச் சுமையைத் தாங்க முடியாது,


3 வருடங்களாக முடங்கிக் கிடக்கும் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை உடனடியாக திற, என கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தநிலையில் யூனியன் பிளேஸ் ஊடாக போராட்டக்காரர்கள் கொழும்பு கோட்டை பகுதிக்குள் நுழைய முயற்சித்தனர்.

இதன்போது போராட்டத்தினை கலைப்பதற்காக பொலிஸாரினால் கண்ணீர்ப்புகை பிரயோகம் மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் எமது அலுவலக செய்தியாளர் குறிப்பிட்டார்.

# வெள்ளி மின்வெட்டு அட்டவணை



FRIDAY 08/19
සිකුරාදා வெள்ளி

Approved Power Interruption Schedule
අනුමත විදුලි කප්පාදු කාලසටහන
அங்கீகரிக்கப்பட்ட மின்தடை அட்டவணை

| Electricity Supply Disconnection Time<br>විදුලි සැපයුම විසන්ධි කරන වේලාව<br>மின்சார விநியோகம் தடை நேரம் | Electricity Supply Restoration Time<br>විදුලි සැපයුම යථා තත්වයට පත්වන වේලාව<br>மின்சார விநியோகம் திரும்பும் நேரம் | Group<br>කාණ්ඩය<br>பிரிவு | Duration<br>කාල සීමාව<br>காலம் |
|---|---|---|---|
| 5:30AM - 5:50AM | 8:30AM - 8:50AM | M, N, O, X, Y, Z (BOI Zones) | 3hrs |
| 6:00AM - 6:20AM | 8:30AM - 8:50AM | CC (Colombo City Commercial Zones) | 2hrs 30min |
| 1:00PM - 1:30PM | 2:40PM - 3:10PM | I, J, K, L, S, T | 1hr 40min |
| 2:40PM - 3:10PM | 4:20PM - 4:50PM | E, F, G, H, U, V, W | |
| 4:20PM - 4:50PM | 6:00PM - 6:30PM | A, B, C, D, P, Q, R | |
| 6:00PM - 6:30PM | 7:20PM - 7:50PM | I, J, K, L, S, T, U | 1hr 20min |
| 7:20PM - 7:50PM | 8:40PM - 9:10PM | E, F, G, H, V, W, P | |
| 8:40PM - 9:10PM | 10:00PM - 10:30PM | A, B, C, D, Q, R | |

ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
Public Utilities Commission of Sri Lanka
PUCSL

## நாமலுக்கு அமைச்சு பதவி வழங்க கூடாது!

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான தேசிய அரசாங்கம் அமைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொதுஜன பெரமுன கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ச மற்றும் தனித்தனியாக அரசாங்கத்தில் இணையவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் 42 பேர் அடங்கிய குழுவினரை கொண்ட அமைச்சரவை கொண்ட தேசிய அரசாங்கத்தை அடுத்த வாரம் அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வகட்சி அரசாங்கத்தில் கட்சிகளாக இணைந்து கொள்வதற்கு பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனித்தனியாக அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமையினால் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க முடியாத நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், அமைச்சரவையில் நியமிக்கப்படவுள்ள 16 உறுப்பினர்களின் பட்டியலை பசில் ராஜபக்ச, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன, நாமல் ராஜபக்ச, எஸ். எம். சந்திரசேன, மஹிந்தானந்த அளுத்கமகே, பவித்ரா வன்னியாராச்சி மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் அமைச்சர் பதவிகள் வழங்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உட்பட சிலர் எந்த வகையிலும் இந்த யோசனைக்கு இணங்க வேண்டாம் என ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளனர்.

குறிப்பாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நாமல், மகிந்தானந்த, ரோஹித்த ஆகியோர் மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டால், மீண்டும் போராட்டம் ஆரம்பிக்க அது வழிவகுக்கும் என அவர்கள் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## ‘இராஜதந்திர மார்க்கமாக’

அவர் இலங்கையின் குடிமகன், அவர் விரும்பியவாறு பயணம் செய்யலாம்’ என்றும் அலி சப்ரி கூறினார்.

முன்னாள் ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ இராஜதந்திர கடவுச்சீட்டைக் கொண்டுள்ளதால், 90 நாட்கள் வரை தாய்லாந்தில் அவருக்கு தங்கியிருக்க முடியுமென தாய்லாந்து பிரதமர் முன்னதாக தெரிவித்தார்.

தாய்லாந்தில் தற்காலிகமாக தங்கியுள்ள கோட்டாபய, எதிர்வரும் 24ஆம் திகதி நாடு திரும்புவார் என்று, ராஜபக்ஷவின் உடன்பிறவா சகோதரரும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதருமான உதயங்க வீரதுங்க, செய்தியாளர்களிடம் நேற்று புதன் கிழமை தெரிவித்தார்.

## பலதும் பத்தும் பார்த்தே தடையை நீக்கினோம்

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு இருந்தால், அவை பற்றியும் அரச பாதுகாப்பு அமைச்சுக்கு உட்பட்ட அரச புலனாய்வு சேவை உள்ளிட்ட சட்ட நடைமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்குரிய சி.ஐ.டியினர் கடந்த 6 மாதங்களாக ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுகளுக்கமைய அது குறித்து முறையான ஆதாரங்களை தாக்கல் செய்த பிறகு, ஆய்வுக்குட்படுத்தப்பட்டு அந்த தனிநபர்கள் அல்லது அமைப்புகள் பட்டியலிடப்படவோ, நீக்கப்படவோ நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், கடந்த வருடங்களில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் ஒரு வருட காலத்துக்குள் உரிய அதிகாரியிடம் விண்ணப்பத்தின் மூலம் நீக்குவதற்கான கோரிக்கையை முன்வைக்க வாய்ப்பு உள்ளது. அது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு, அதனை உறுதிப்படுத்தும் வகையில் காரணங்கள் முன்வைக்கப்பட வேண்டும். பின்னர் பட்டியலிலிருந்து அந்த நபர் அல்லது அமைப்பு நீக்கப்பட வேண்டுமா என்பது குறித்து வெளியுறவு அமைச்சருக்குப் பரிந்துரைகளை முன்வைக்கும் கடமை, பொறுப்புவாய்ந்த அதிகாரிக்குரியது.

பின்னர், அரச பாதுகாப்புப் படையினரின் தகவல்களை முழுமையாக ஆய்வு செய்த பின்னர், உரிய அதிகாரியின் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன்பின்னர் குறித்த நபர் அல்லது அமைப்பு மீதான தடையை நீக்கலாமா வேண்டாமா என்பது குறித்து அமைச்சருக்கு பரிந்துரை வழங்கும் கடமை, பொறுப்பு வாய்ந்த அதிகாரியைச் சாரும்.

அமைச்சரின் முடிவே இறுதி முடிவு என்றும், பாதிக்கப்பட்ட தரப்பினர் அதை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் செயற்பாடுகள் ஒவ்வொன்றின் இறுதி முடிவும், அடுத்த வரவிருக்கும் வர்த்தமானியில் (ஆண்டுதோறும் வெளியிடப்படும்) உரிய அதிகாரி, செயலாளர், பாதுகாப்பு அமைச்சால் வெளியிடப்படும். அந்த நடைமுறைகள் அனைத்தும், ஐக்கிய நாடுகளின் சாசனத்தின்படி மேற்கொள்ளப்படுகின்றன – என்றுள்ளது.

## பிளவடைகின்றது சஜித் அணி

சம்மதத்துடன் ஜனாதிபதி சூட்டுவார்.

அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அசைக்க முடியாத அரசை நிறுவுவதே ஜனாதிபதியின் விருப்பம். இதற்காகப் பல கட்சிகளை அவர் தனித்தனியே சந்தித்தும் பேச்சு நடத்தியுள்ளார். எனினும், சில கட்சிகள் இழுத்தடிப்புக்களைச் செய்கின்றன. சர்வகட்சிகளை உள்ளடக்கிய தேசிய வேலைத்திட்டத்துக்குக்கூட சில கட்சிகள் நிபந்தனைகளை விதிக்கின்றன.

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியால் சிக்குண்ட நாட்டை உடனடியாக மீட்டெடுக்க வேண்டும். இது கட்சி அரசியல் செய்யும் நேரமல்ல.

எனவே, காலத்தை வீண்விரயம் செய்யாமல் சேர விரும்பும் உறுப்பினர்களை இணைத்துக்கொண்டு பலமிக்க அரசை நிறுவி பொருளாதாரப் பிரச்சினை உள்ளிட்ட தேசிய பிரச்சினைகள் அனைத்துக்கும் தீர்வுகளைக் காணும் பயணத்தை ஜனாதிபதி உடனடியாக ஆரம்பிக்கவுள்ளார் – என்றார்.



# 3 வயது குழந்தைக்கு முன்னால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான இளம் தாய்

(பாறுக் ஷிஹான்)

தனது 3 வயது குழந்தைக்கு முன்னால் இளம் தாய் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான சம்பவம் ஒன்று அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் பதிவாகியுள்ளது.

கடந்த 3.07.2022 அன்று 25 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரை கணவன் வீட்டில் இல்லாத வேளை அவரது 3 வயது பிள்ளை பார்த்து இருந்த சந்தர்ப்பத்தில் அயலவர் ஒருவரினால் கத்தி மூலம் அச்சுறுத்தபட்டு பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளானதாக முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் குறித்த முறைப்பாட்டில் பாதிக்கப்பட்ட பெண் சுமார் 1 வயது மற்றும் 3 வயது பெண் குழந்தைகளின் தாய் என்பதுடன் மாளிகைக்காடு கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகை அடிப்படையில் வசித்து வந்துள்ளார். இந்நிலையில் தனது வீட்டில் கணவன் இல்லாத நிலையில் குறித்த பெண் சம்பவ தினமன்று தங்கி இருந்ததுடன் இரவு 7 மணியளவில் அத்துமீறி பிரவேசித்த நபர் ஒருவரினால் 3 வயதான தனது மகள் பார்த்து கொண்டிருந்த வேளை கத்தி மூலம் அச்சுறுத்தபட்டு வலுக்கட்டாயமாக பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளானதாகவும் அபயக்குரல் எழுப்பியும் எவரும் தன்னை காப்பாற்றவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதுடன் தன்னை துஸ்பிரயோகப்படுத்திய நபர் 20 ஆயிரம் ரூபா பணம் மற்றும் சில பொருட்களை கொள்ளையிட்டு சென்றுள்ளதாக அதில் குறிப்பிட்டுள்ளார்.

இருந்த போதிலும் குறித்த பெண் வழங்கிய முறைப்பாட்டினை பெற்றுக்கொண்ட காரைதீவு பொலிஸ் நிலையம் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கான நீதியான நடவடிக்கை எடுக்க தவறி உள்ளதுடன் அப்பெண் தனக்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்தி தருமாறு கோரி மனித உரிமை ஆணைக்குழுவிற்கு சென்று தஞ்சமடைந்துள்ளார்.

அத்துடன் வலுக்கட்டாயமாக தன்னை பாலியல் துஸ்பிரயோகம் செய்த நபரிடம் இருந்து பாதுகாப்பு பெற்று தருவதுடன் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க தவறிய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் எதிராக கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவில் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளானதாக கூறப்படும் இளம் பெண் முறைப்பாடு ஒன்றினை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறைப்பாட்டிற்கமைய காரைதீவு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கல்முனை மனித உரிமை ஆணைக்குழுவினால் சம்பவம் தொடர்பாக விசாரணை அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பெண் அண்மையில் வேறு மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாற்றலாகி வாழ்ந்து வருபவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சீமேந்து ஏற்றுவதற்கான கட்டணத்தை வரையறுக்கிறது

## கல்முனை மாநகர சபை



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை எல்லையினுள் உடனடியாக அமுலுக்கு வரும் வகையிகள் சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான அதிகூடிய வாகன வாடகைக் கட்டணமாக பொதியொன்றுக்கு 60 ரூபாவே அறவிடப்பட வேண்டும் என மாநகர சபை வரையறுத்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பைக் காரணம் காட்டி, சீமெந்து பொதிகளை ஏற்றுவதற்கான கட்டணத்தை முறையற்ற விதத்தில், விரும்பியவாறு அதிகரித்து, அறவிடுவதாக பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி, உரிய நடவடிக்கைகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டிருப்பதாக மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் வியாழக்கிழமை (18) தெரிவித்தார்.

இதன்படி 100 பொதிகளுக்கு மேல் ஏற்றப்பட்டால் 50 ரூபா வீதமே கட்டணம் அறவிடப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இந்த சேவையில் ஈடுபடும் வாகனங்கள் அனைத்தும் கல்முனை மாநகர சபையில் பதிவு செய்யப்பட்டு, அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதியின்றி இவ்வாறான சேவையில் ஈடுபடுவது சட்டவிரோதமாகையினால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஹார்ட் வெயார் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் குறித்த கட்டணங்களை உறுதிப்படுத்திய பின்னரே சீமெந்து பொதிகளை வாகனங்களில் ஏற்றிச்செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் இந்த விடயத்தில் தவறிழைக்கும் ஹார்ட் வெயார் மற்றும் விற்பனை நிலையங்களின் வியாபார உரிமம் இரத்து செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பம்







ஈழமணித் திருநாட்டின் கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புடையதும் தொண்மை வாய்ந்ததுமான மகா துறவி சுவாமி ஓங்காரானந்த சரஸ்வதி அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவ பெருவிழா நேற்று (17) புதன் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

நேற்றையதினம் காலை மட்டக்களப்பு அரசடியில் உள்ள சித்திவிக்னேஸ்வரர் ஆலயத்தில் இருந்து கொடிச்சீலை திருச்செந்தூர் முருகன் ஆலயத்தினை வந்தடைந்ததும் விசேட யாக பூசைகள் இடம்பெற்று, ஆலயத்தில் மூலமூர்த்திக்கு அபிசேக ஆராதனைகள் இடம்பெற்றதனைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெற்று, விசேட ஆராதனைகள் மற்றும் கொடிக்கம்ப அபிசேக ஆராதனைகள் என்பன நடைபெற்றன.

கொடியேற்றத்தினை தொடர்ந்து முதல் எட்டு நாட்கள் திருவிழாவில் நாளாந்தம் சுவாமி உள்வீதி வெளிவீதியுலா என்பன இடம்பெற்று, ஒன்பதாம் நாளாகிய 25.08.2022 வியாழக்கிழமையன்று பி.ப 3.00 மணியளவில் தேர்த்திருவிழாவும் பத்தாம் நாளாகிய 26.08.2022 திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக் கடலில் சமுத்திர தீர்த்தோற்சவம் இடம்பெற்று இவ்வாண்டிற்கான மஹோற்சவ பெருவிழா இனிதே நிறைவடையவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயங்களில் தமிழ் மொழியில் வேத பாராயணங்கள் ஓதப்பட்டு முருகப்பெருமானிற்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஒரேயொரு ஆலயமாக இவ்வாலயம் திகழ்வதும், இந்தியாவின் புகழ் பூத்த முருகன் ஆலயமான திருச்செந்தூர் ஆலயத்தினை நோக்கியதாக இந்த ஆலயம் அமைக்கப்பட்டுள்ளதும் சிறப்பம்சமாகும்.

# சாய்ந்தமருது வைத்தியசாலைக்கு நோயாளர் பராமரிப்பு உபகரணங்கள் கையளிப்பு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலைக்கு நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த நோயாளர் பராமரிப்புக்குரிய ஒரு தொகுதி உபகரணங்கள், தனவந்தர் ஒருவரின் அனுசரணையுடன் இன்று வியாழக்கிழமை (18) வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை சமூகத்தின் வேண்டுகோளையேற்று மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த பட்டயக் கணக்காளர் எம்.வை.எம்.இப்றாஹிம் என்பவரே இவற்றைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளார்.

இவற்றைக் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் இடம்பெற்றபோது கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ், பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதுடன் வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்தி சபை செயலாளர் எம்.ஐ.எம்.சதாத் உள்ளிட்ட நிர்வாகத்தினரும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது கணக்காளர் எம்.வை.எம்.இப்றாஹிம் அவர்களின் மனிதாபிமான சேவைக்கு பணிப்பாளர், வைத்திய அதிகாரிகள் மற்றும் நிர்வாகத்தினரால் நன்றியும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

# திருகோணமலையில் சிவில் சமூக செயற்திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு



(அ . அச்சுதன்)

ஐக்கிய அமெரிக்க தூதரகத்தின் நிதியுதவியுடன் சேர்விங் ஹியூமானிட்டி பவுன்டேசன் கிண்ணியா அமைப்பினரின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 சிவில் சமூக அமைப்புகளின் திறன் விருத்தியை மேம்படுத்தும் செயலமர்வொன்று கிண்ணியா விஷன் மண்டபத்தில் இன்று (18)நடைபெற்றது.

PEACE எனும் இப்புதிய செயற்திட்டம் சமூகத்தின் ஒன்றிணைக்கப்பட்ட செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கான மக்களின் ஈடுபாட்டை மேம்படுத்தல் People's Engagement and Action For Civic Empowerment(PEACE) எனும் தலைப்பில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 20 சிவில் சமூக அமைப்புகளை ஜனநாயக மற்றும் அபிவிருத்தி துறையில் மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேற்படி அங்குரார்ப்பண நிகழ்வில் திருகோணமலை மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர் திரு. B. H. N. ஜயவிக்ரம பிரதான விருந்தினராகவும், மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. அத்தநாயக்க, நிறுவனத்தின் தலைவர் ரஸீனா சாலே, பிரதம நிறைவேற்று அதிகாரி ஆஷிக் அலாப்தீன் மற்றும் சிவில் சமூக அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின் வளவாளராக திரு. சுஜீவன் சித்ரவேல் மற்றும் அவரது உதவியாளர் திரு. மதியழகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தவிசாளரின் விடாமுயற்சியால் விவசாயிகளுக்கு பசளை வழங்கி வைப்பு





(பைஷல் இஸ்மாயில்)

திருகோணமலை - புல்மோட்டை கமநல சேவை நிலையத்தில் ஆண்டாங்குள விவசாயிகளுக்கென களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பசளைகளை பிறிதொரு பிரதேசத்துக்கு வழங்க திட்டமிடப்பட்டிருந்த செயற்பாட்டை குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் ஏ.முபாறக் தலையிட்டு உடனடியாக தடுத்து நிறுத்தி பசளைகளை ஆண்டாங்குள விவசாயிகளுக்கு வழங்கி வைத்தார்.

புல்மோட்டை கமநல சேவை நிலையத்தினால் இந்த விடயம் முன்னெடுக்கப்படுவதை அறிந்து கொண்ட ஆண்டாங்குள விவசாயிகள் குறித்த விடயத்தை குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வந்ததையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கமநல திணைக்கள ஆணையாளரை தொடர்பு கொண்டு ஆண்டங்குள விவசாயிகளின் நிலமையை தெளிவுபடுத்திய பின்னர் மாவட்ட கமநல உதவி ஆணையாளரின் பணிப்புரைக்கமைவாக ஆண்டாங்குள விவசாயிகளுக்கு உரிய பசளைகள் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதனை முன்னெடுத்த தவிசாளருக்கு ஆண்டாங்குள விவசாயிகள் நன்றிகளைத் தெரிவித்தனர்.



# வரட்சியினால் பாதிக்கப்பட்ட மஜ்மா நகர் மக்களுக்கு குடிநீர் வழங்கல்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக்கமைய பிரதேச செயலாளரினால் மாவட்ட அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்திடம் வேண்டிக்கொண்டதற்கிணங்க பிரதேச சபையின் ஏற்பாட்டில் மஜ்மா நகரில் வரட்சியினால் பாதிக்கப்பட்டு குடிநீர்த்தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு குடிநீர் வினியோகிக்கப்பட்டது.

இதில் அப்துர் ரஹ்மான் வீட்டுத்திட்டம், முஹைதீன் அப்துல் காதர் வீட்டுத்திட்டம், சிராஜிய்யா அரபுக்கல்லூரி, பிலால் பள்ளிவாயல் மற்றும் றஹ்மா ஜுூம்ஆ பள்ளிவாயல் போன்றவற்றிற்கு ஆரம்பக் கட்டமாக நீர்த்தாங்கி வைத்து குடிநீர் விநியோகிக்கப்பட்டது.

குடிநீர் வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக அனர்த்த சேவைகள் உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம், பிரதேச சபை சாரதி முஹம்மது ஜபீர் ஆகியோரும் பிரதேச பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

இதற்கான ஏற்பாட்டைச்செய்த தவிசாளர் ஏ.எல்.நௌபர், ஓட்டமாவடி பிரதேச செயலார் வீ.தவராஜா, ஓட்டமாவடி பிரதேசசபை செயலாளர் எஸ்.சிஹாப்தீன், உத்தியோகத்தர் கே.புவிதரன், கிராம சேவை உத்தியோகத்தர் எம்.எச்.எம்.அஸ்ஹர், பிரதேசசபை உறுப்பினர், பிரதேச செயலக மற்றும் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு அப்பகுதி மக்கள் சார்பாக கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் ஏ.எல்.சமீம் நன்றி தெரிவிக்கின்றார்.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக் இடமாற்றம், பிரியாவிடை நிகழ்வு ஏற்பாடு

(பாறுக் ஷிஹான்

இடமாற்றலாகி செல்லவுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஏ.ஆர்.எம் தௌபீக் அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம் றிபாஸ் தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை(20) அன்று கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ ஆர் எம் தௌபீக்கின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் பிரியாவிடை நிகழ்வு சிறப்பாக கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது.

இதன் போது கொழும்பு மாவட்டத்திற்கு இடமாற்றலாகி செல்லவுள்ள கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ ஆர் எம் தௌபீக் கடந்த



2021.04.09 கடமை ஏற்ற காலங்களில் கொவிட் தொற்றுக்கு மத்தியில் இன மத பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியதுடன் இந்நிகழ்வில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை பாராட்டி பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சம்மாந்துறையை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கடந்த காலங்களில் வெலிசர சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளராகவும் நீர்கொழும்பு மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் ராகம போதனா வைத்தியசாலை ஆகியவற்றின் வைத்திய அத்தியட்சகராகவும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்களுக்கான அத்தியட்சகராகவும் கடமையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் புதிதாக கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் டி.ஜி.எம் கொஸ்தா அவர்களை வரவேற்கும் நிகழ்வும் வெள்ளிக்கிழமை(19) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

மேற்குறித்த நிகழ்வுகளுக்கான ஒழுங்குகளை கல்முனை பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் எம்.பி.ஏ வாஜித் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சி.எம் மாஹிர் உள்ளிட்ட பிராந்திய பொறுப்பு வைத்திய அதிகாரிகள குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

# செங்கலடி - ரமேஸ்புரம் சித்திரவேலாயுத சுவாமி ஆலய பாற்குடபவனி







(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு செங்கலடி - ரமேஸ்புரம் சித்திரவேலாயுத சுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் பாற்குடபவனி நேற்று (17) திகதி புதன்கிழமை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளினை தொடர்ந்து ஆரம்பமான பாற்குட பவனியில் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

குறிப்பாக இம் முறை பாற்குட பவனியை அலங்கரிங்க பொம்மலாட்டம், புலியாட்டம், குதிரையாட்டம் என்பனவும் இடம்பெற்றிருந்தமை சிறப்பம்சமாகும்.

# அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தினால் அவசரகால மனிதாபிமான உதவி வழங்கி வைப்பு





(நூருல் ஹுூதா உமர்)

தற்போது பொருளாதார நெருக்கடி மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள பதுளை மாவட்டத்தின் அப்புத்தளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தொட்டுவாகலை தோட்டக்குடியிருப்பில் வாழும் பெண்கள் தலைமை தாங்கும் வசதி குறைந்த 112 விதவைகள் குடும்பங்களுக்கு உலர் உணவு பொருட்கள் அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தினால் இன்று வழங்கி வைக்கப்பட்டது. இதில் கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் ஆலோசகர் கலந்து கொண்டு வழங்கி வைத்தனர்.

இதற்காக அமெரிக்க ஈகைத் தமிழ்ச் சமூகத்தின் தலைவர் பெரியநாயகி சிவராஜ், செயலாளர் சுகதேவ் வேலாயுதம், பொருளாளர் நடனசபேசன் முருகானந்தம், பாலமுருகன் சம்பந்தம், தினேஸ் கந்தசாமி, வசந்த் வல்வில் ஓரி, விஜயகுமார் மனோகரன் மற்றும் அங்கத்தவர்கள் இணைந்து இதற்கான நிதியுதவியினை வழங்கியிருந்தனர். இதனை நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகம் மற்றும் ப்ரண்ஷிப் பௌண்டஷன் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் கிராமங்களில் செயற்படும் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களுக்கு அழைப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் பிரதேச பிரிவுகளில் மற்றும் தமிழ் கிராமங்களில் செயற்ப்படும் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களை அம்பாறை மாவட்டத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வரையறுக்கப்பட்ட கல்முனை அம்பாரை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசதில் அங்கத்தவர்களாக இணையுமாறு சமாசத்தின் தலைவர் எஸ் .லோகநாதன் அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில அவர் விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது ;

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கு சமாசம் தேவையென 1987ம் ஆண்டு கொடிய யுத்த சூழ்நிலையிலும் தமது உயிரை கூட துச்சமாக மதித்து பல இனவாத அச்சுறுத்தல் மத்தியிலும் இஸ்தாபக தலைவர் காலம் சென்ற திரு.பி.சண்முகம் ஐயா மற்றும் பல தியாகிகளின் கடின உளைப்பினால் இச்சமாசம் உருவாக்கப்பட்டது. ஏற்கனவே மத்திய அரசாங்கத்தினால் கல்முனை மாவட்ட சமாசம் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருந்தும் வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் திரு.சி.பற்குணம் ஐயா அவர்களினால் தனிப்பட்ட அயராத முயற்சி காரணமாக 1992ம் ஆண்டு எமது சமாசம் பதிவு செய்யபட்டுள்ளது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட சமாசம் இடைகாலங்களில் இருந்த நிர்வாகிகளின் அசமந்த போக்கு காரணமாக நிதி நெருக்கடிக்கு மத்தியிலும் இச் சமாசமானது மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இருந்தும் 2019ம் ஆண்டு எனது தலைமையில் இருக்கும் இயக்குனர் சபையின் நிர்வாகிகள் மற்றும் உத்தியோகதர்களினதும் ஒத்துழைப்புடன் இச் சமாசத்தை சிறப்பாக இயக்கி வருகிறோம். இதேவேளை 2020ம் ஆண்டு சமா



சம் இலாபத்தையும் பெற்றுள்ளோம். மேலும் தற்பொழுது நெதர்லாந்து நாட்டின் மனிதநேய கூட்டுறவுசங்கம் தலைவர்இசெயலாளர்இபொருளாளர் மற்றும் நிர்வாதினரது ஒத்துழைப்பும் அனுசரனையுடனும் விவசாய ஊக்குவிப்பு விவசாய கடன் 5 ஆண்டு திட்டத்திற்கு அமைவாக ரூபா 4இ000இ000 நாவிதன்வெளி பிரதேச ஐந்து சங்கங்களுக்கு அதன் உறுப்பினர் 100 பேருக்கு வட்டியில்லா கடன் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சமாசத்தின் நிர்வாக செலவுகளுக்கும் ரூபா 3இ50இ000 அன்பளிப்பு செய்துள்ளனர் என்பதையும் அறியத்தருகின்றோம்.

2021 - 2022ம் ஆண்டுக்கான எனது தலைமையில் தெரிவுசெய்யப்பட்ட புதிய இயக்குனர் சபை சிறப்பாகவும் தியாக அற்ப்பணிப்புடன் அம்பாறை மாவட்டத்தில் பின் தங்கிய தமிழ் கிராமங்களையும் அங்கு வாழுகின்ற தமிழ் மக்களின் கல்வி சுகாதாரம் கலாசாரம் அபிவிருத்தி போன்றவற்றை 2022ம் ஆண்டில் நடைமுறைபடுத்திட சமாசம் உறுதி கொண்டுளோம்.

எனவே அம்பாறை மாவட்டத்தில் சகல தமிழ் கிராமங்களில் உள்ள சிக்கன கடனுதவும் கூட்டுறவு சங்கங்களும் எமது சமாசத்தில் அங்கத்தவர்களாக தமிழ் மக்களின் எதிர்கால முன்னேற்றம் கருதி இணையுமாறு அழைப்பு விடுக்கின்றோம் என அச்செய்தி குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

# ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாம்




(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் இரத்ததான முகாமொன்று நடைபெறவுள்ளதாக இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் தெரிவித்தார்.

நாட்டின் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக வேண்டி ஓட்டமாவடி பிரதேச இளைஞர் கழக சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ள இவ் இரத்ததான முகாம் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது.

ஆண், பெண் என இருபாலாருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான முகாமில் அனைவரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்குமாறு இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் வேண்டிக் கொண்டுள்ளார்.

## தி லேஜன்ட் ப்ரீமியர் லீக் - 2022:
# வெற்றிவாகை சூடியது லேஜன்ட் சலேஞ்ஞர்ஸ் அணி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

The Legend College இனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான The Legend Premier league &2022 கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ரி ஆப்தீன் தலைமையில் பேருவளை நளீம் ஹாஜியார் மைதானத்தில் அண்மையில் இடம் பெற்றது.

ஓர் அணிக்கு 11 வீரர்கள் என்ற அடிப்படையில் 10 அணிகள் களமிறங்கிய இச் சுற்றுப் போட்டியில், சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி Legend Challengers மற்றும் Legend Super Kings அணியினர் இறுதிச் சுற்றுக்குத் தெரிவாகினர்.

இதில் முதலாம் இடத்தினைப் பெற்று, ஆசிரியர் ஸர்ஹான் தலைமையில் விளையாடிய Legend Challengers அணியினர் வெற்றிக் கிண்ணத்தைத் தம் வசப்படுத்திக் கொண்டனர். மேலும், இரண்டாம் இடத்தினை ஆசிரியர் அஸ்வின் தலைமையில் விளையாடிய Legend Super Kings அணியினர் பதிவு செய்தனர்.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை இளைஞர் பாராளுமன்ற வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹமட் சாதிக், மற்றும் கௌரவ அதிதியாக மனித உரிமை அமைப்பின் உறுப்பினரும் தேசிய இளைஞர் சேவை கவுன்சில் உறுப்பினரும் இளைஞர் பாராளுமன்ற வேட்பாளருமான இஸ்திபிஷார் நஸீர், The Legend College நிறுவனத்தின் தலைவர் அஷ்ரி ஆப்தீன், Physiotherapy வைத்தியர் ஹஸ்னா, RJ MEDIA வின் பணிப்பாளர் அறிவிப்பாளர் ஏ.எம். இன்ஸாப் மற்றும் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்ததோடு ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் கிண்ணம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிறுவனமானது மாணவர்கள் மத்தியில் சிறந்த கல்வியினை வழங்கி வருவதோடு மாத்திரம் நின்று விடாது, மாணவர்கள் மத்தியில் காணப்படும் திறமைகளை இனங்கண்டு அவர்களுக்கிடையில் பல்துறைசார் விருத்தியினை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் இலவச மருத்துவ முகாம்

(நாவலப்பிட்டி நிருபர்)

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பினால் எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலவச மருத்துவ முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஹபுகஸ்தென்ன வேவல்கெட்டிய கிராமிய வைத்தியசாலையில் எதிர்வரும் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை இந்த மருத்துவ முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நோயற்ற ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம் என்ற தொனிப்பொருளில் இந்த மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது.



மலையக தமிழரின் சமூக பொருளாதார வளர்ச்சியை இலக்காக கொண்டு குறுகிய காலத்திற்குள் இந்த இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பு மக்களுக்கு பாரிய வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலத்திற்கான வகுப்பறைக் கட்டிடத்திற்கு அடிக்கல் நட்டி வைப்பு



(எப்.முபாரக் )

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கின் ஏற்பாட்டில் ஐஎஸ்ஆர்சி நிறுவனத்தின் நிதியுதவியுடன் பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்திற்கான இரண்டு வகுப்பறைகளைக் கொண்ட கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று (18) நடைபெற்றது.

நீண்ட காலமாக கட்டிட பற்றாக்குறையுடன் காணப்படும் பாடசாலைக்கே இவ்வாறு அடிக்கல் நட்டி வைக்கப்பட்டது.

இவ்வைபவத்தின்போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், கிண்ணியா நகர சபை தவிசாளர் ஏ.எம்.நிவாஸ், அதிபர் ஏ.எம் தாரிக், வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.நஸூர்கான், நகரசபையில் கடமையாற்றும் எம். சுபைர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

# தமிழ்மொழி தின போட்டிகள் தொடர்பான திருத்தப்பட்ட திகதிகள்!
## கல்வி அமைச்சு அறிவிப்பு

( காரைதீவு நிருபர் சகா)

சமகால நிலைமையை கருத்திக் கொண்டு அகில இலங்கை தமிழ் மொழி தின போட்டிகள் நடத்தப்பட வேண்டிய திருத்தப்பட்ட திகதிகளை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதற்கு அமைவாக கிழக்கு மாகாண கல்வி பணிப்பாளர் திருமதி என் புள்ளநாயகம் கிழக்கு மாகாணத்தில் போட்டிகள் நடத்தப்படுவதற்கான திருத்தப்பட்ட திகதிகள் தொடர்பாக சகல வலய கல்வி பணிப்பாளர்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

இதன்படி சகல வலையமட்ட தமிழ் மொழி தின போட்டிகளும் எதிர்வரும் 29 ஆம் தேதி இடையில் நடத்தப்பட வேண்டும். அதேபோன்று மாவட்ட மட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 4 தேதிக்கு இடையே நடத்தப்பட வேண்டும்.

கிழக்கு மாகாண மட்ட போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 24 மற்றும் 25 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் செப்டம்பர் 10ஆம் திகதிக் கிடையில் அனுப்பப்படவேண்டும். ஆனால் எழுத்தாக்கபோட்டிகளுக்கான வலய மட்டப்போட்டிக்கான விண்ணப்ப முடிவு தேதி 20. 8 .2022 ஆகும்.

மாவட்ட மற்றும் மாகாண எழுத்தாக்க போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 11.09.2022 எனஅறிவிக்கப்பட்டு இருக்கின்றது.

# நீண்ட காலமாக மூடப்பட்டுள்ள மன்னார் - புத்தளம் பாதை மீள் திறப்பு தொடர்பில், ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் அதிகாரிகள் குழுவினர் விஜயம்!



மன்னார் - புத்தளம் பாதை (எலுவன்குளம் ஊடாக) கடந்த பலவருடங்களாக மூடப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீளத்திறந்து மக்களின் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான உதவிகளை செய்யுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கப் பெற்றுள்ளது.

அண்மையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அதன் தலைவர் ரிஷாட் பதியுதீன் தலைமையில், ஜனாதிபதியினை சந்தித்த போது மேற்படி பாதையின் அவசியம் தொடர்பில் எடுத்துரைத்திருந்த நிலையில், இதற்கான ஆரம்ப பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புதன்கிழமை (17) எலுவன்குளம் பகுதிக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர்கள், வன்னாத்தவில்லு பிரதேச செயலாளர் மற்றும் வனவிலங்கு திணைக்கள அதிகாரிகள் கொண்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். மேற்படி குழுவினர் கள நடவடிக்கைகளை இங்கு மேற்கொண்டனர். இதன்போது, வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனும் இங்கு வருகை தந்திருந்ததுடன், குறித்த பாதை தொடர்பில் அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டார்.

இன்றைய விஜயத்தின் போது, அதிகாரிகளினால் எலுவன்குளம் பாலத்தின் புனரமைப்பு தொடர்பிலான வரைபடம் தயார்படுத்த போதுமான அளவீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மேற்படி பாலத்தில் இருந்து மறிச்சுக்கட்டி நோக்கி செல்லும் உட்பாதையில் சேதமடைந்துள்ள இரு பாலங்களை பார்வையிட அதிகாரிகள் குழுவினர் அங்கு விஜயத்தினை மேற்கொண்டனர்.

மேற்படி பாதையானது பல நூறு வருடங்கள் பழமை வாய்ந்தமை. முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் முயற்சியால் திறந்துவைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டிருந்த நிலையில், அதன்பிற்பாடு கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையிலான அரசின் போது நிரந்தரமாக இப்பாதை மூடப்பட்டிருந்த நிலையில், மீண்டும் இதனை திறப்பதற்கான முன்னெடுப்புக்களை ரிஷாட் எம்.பி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் கவனத்திற்கு கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மயிலத்தமடு மேய்ச்சற்தரை ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டம்

(சுமன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்குச் சொந்தமான பல இலட்சம் கால்நடைகளின் மேய்ச்சல் தரையான மயிலத்தமடு பகுதி சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டு தமிழர்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதைக் கண்டித்து நேற்றையதினம் மட்டக்களப்பு செங்கல்டி சந்தியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில்

கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. தமிழ்த்



தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் பொதுமக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள், கால்நடை வளர்ப்போர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பௌத்த சிங்கள அரச பயங்கரவாதத்தினால் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு பகுதிகள் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டு பௌத்த விகாரைகளும், சிங்களக் குடியேற்றங்களும் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சீன உளவுக்கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் என்றால் நாம் அதனை வன்மையாக எதிர்ப்போம்

( காரைதீவு நிருபர் சகா)

தற்போது நாட்டுக்கு வந்திருக்கின்ற சீன உளவுக் கப்பல் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்குமானால் அதை நாங்கள் வன்மையாக எதிர்ப்போம்.

இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

சீன உளவுக்கப்பல் இலங்கை வந்திருப்பது குறித்து கருத்து கேட்கப்பட்ட போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்...

இந்தியாவுக்கு அண்மித்த பிரதேசத்தில் இலங்கை இருக்கின்றது. ஆகவே தான் போர்சிட்டி விடயத்திலும் நாங்கள் இதனை கூறி இருந்தோம்.

இந்தியாவுக்கு அண்மித்த சூழலில் இலங்கை இருப்பதால் அதன் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்குமாக இருந்தால் அதனை நாங்கள் எதிர்ப்பது தார்மீகமாகும்.

அதற்காக சீனாவுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.

சிலவேளை இலங்கை தென் சீன கடலிலே இருந்து அங்கு இந்திய உளவுக்கப்பல் அங்கு தரிக்குமானால் அது சீனாவின் பாதுகாப்புக்கு குந்தகமாக இருக்கும். அப்பொழுது நாங்கள் இந்தியாவுக்கு எதிர்ப்பாக தீர்மானம் எடுப்போம்.

ஆனால் ,இங்கு சீனாவுக்கு தூரமாக இந்தியா இருக்கின்றது ஆகவே இந்தியாவுக்கு அருகாமையில் நாங்கள் இருப்பதால் நாங்கள் இந்த சீனக் கப்பல் இலங்கைக்கு வந்திருப்பதை நாங்கள் வன்மையாக கண்டிக்கிறோம். என்றார்.



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# நவீன அறிவியல் மருத்துவத்தின் நோய் அறிதல் முறைமை




எமது நோயறிகுறிகளை மருத்துவரிடம் சொன்ன மறுகணமே, மருத்துவர் எமது நோயைக் கண்டறிந்து, அந்நோய்க்கு உடனடி நிவாரணமளிக்கக்கூடிய மருந்துகளைத் தமக்கு வழங்கிட வேண்டும் என்றும், அந்த மருந்துகளை உட்கொண்ட மறுகணமே, எமது நோயறிகுறிகளெல்லாம் மறைந்து, ஆரோக்கியமானவர்களாக தாம் மாறிவிட வேண்டும் என்றும் பலர் எதிர்பார்க்கின்றனர்.

பல சந்தர்ப்பங்களில் இத்தகைய அதிசயத்தை நிகழ்த்துவதற்கு, எம்மைப் போன்ற மருத்துவர்கள், மருத்துவத்தை மட்டுமல்லாது, மாயாஜாலத்தையும் கற்றிருக்க வேண்டும்.

மருத்துவம் என்பது, சடுதியாகவும், தானாகவும் உருவானதொரு கலையல்ல. மாறாக, அது பல நூற்றாண்டுகளாக, கட்டம் கட்டமாக, மனித உடலைப் பல கோணங்களிலும் ஆய்வுகள் செய்து உருவான கலையாகும். மருத்துவத்தின் அடிப்படையே ஆய்வுகள் தான்; அதனால் மருத்துவர்களும் ஆய்வாளர்களாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

எமது உடலில் ஏற்படும் பல நோய்கள், எமது உடலில் காணப்படும் நோய் எதிர்ப்பு சக்தி போன்ற இயற்கையான பொறிமுறைகள் மூலம் இயல்பாகவே சரி செய்யப்பட்டுவிடுகின்றன. இத்தகைய சரிப்படுத்தல்களுக்கு எமது உடலுக்கு அவகாசம் அவசியமாகும். எனினும், பல சந்தர்ப்பங்களில் நோயறிகுறிகள் எம்மை வாட்டி வதைத்து, எம் பொறுமையைச் சோதித்து விடுகின்றன. இதனால், நாம் உடலுக்கு அவகாசமளிக்காது, மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டிய நிலைக்கு ஆளாகிறோம்.

இன்னொருபுறம், எல்லா நோய்களையும் எமது உடலினால் இயல்பாகக் குணப்படுத்த முடிவதில்லை. பல நோய்களைக் குணப்படுத்த மருத்துவத்தின் தலையீடு அவசியமாகும். எனினும், எந்நோய்களைக் குணப்படுத்த மருத்துவத்தின் தலையீடு அவசியம் என்பது குறித்து போதிய அறிவு நமக்கிருப்பதில்லை. இதனாலும், மருத்துவர்களின் உதவியை நாடவேண்டிய தேவை நமக்கு ஏற்படுகிறது. எதுவாயிருப்பினும், ஒரு மருத்துவரை அணுகும் போது நமக்குப் பொறுமை மிக அவசியமாகும்.

ஒரு வைத்தியரை நீங்கள் சந்திக்கின்றபோது, உங்களது ஆரோக்கியம் தொடர்பாக ஒரு ஆய்வை மேற்கொள்வது, அவரின் தலையாய கடமையாகும். அந்த ஆய்வின் பிரதிபலனாகத்தான், உங்கள் நோய் அறியப்பட்டு, அதற்கான சிகிச்சையும் உங்களுக்கு வழங்கப்படும்.

முதலில் அவர் உங்களைப் பற்றியும், உங்களது ஆரோக்கிய நிலை பற்றியும், உங்களுக்கேற்பட்டிருக்கும் நோயறிகுறிகள் பற்றியும் கேள்விகள் மூலம் அறிந்து கொள்வார். இது வரலாறு எடுத்தல் (History taking) உங்களிடமிருந்து சேகரிக்கப்படும் வரலாற்றுக் குறிப்புகள், உங்கள் வைத்தியருக்கு உங்களது நோய் குறித்துப் பல சங்கதிகளைச் சொல்லும். உங்களுக்குக் காய்ச்சலும், இருமலும் மாத்திரமென்றால், அது சொல்லும் சங்கதியும், காய்ச்சல், இருமலோடு சேர்த்து, மூச்சு விடுவதில் சிரமமுமென்றால், அது சொல்லும் சங்கதியும் ஒன்றல்ல.



இருப்பினும், வெறுமனே உங்கள் வரலாற்றை மட்டும் வைத்துக் கொண்டு, உங்கள் நோயை முழுவதுமாகக் கண்டுபிடித்துவிட முடியாது. உங்களிடம் எடுக்கப்பட்ட வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு, உங்களுக்கிருக்கும் நோய் இவைகளாய் இருக்கக்கூடும் எனச் சில ஊகங்களை (Differential diagnosis) ஏற்படுத்திக் கொள்ளும் உங்கள் வைத்தியர், அடுத்த கட்டமாக உங்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக (Examination) தன்னைத் தயார்படுத்திக் கொள்வார்.

உங்களை நாடி பிடித்துப் பார்ப்பது முதல், கண்களைப் பார்ப்பது, நாக்கைப் பார்ப்பது, மூச்சைச் சோதிப்பது, வயிற்றைச் சோதிப்பது என ஒவ்வொன்றும், உங்களுக்கேற்பட்டிருக்கும் நோயைப் பொறுத்து முக்கியத்துவம் பெறும்.

உதாரணமாக, நீங்கள் காய்ச்சலோடு வருகையில், வயிற்றை அழுத்தினால் நோவில்லாமல் இருப்பதற்கும், நீங்கள் காய்ச்சலோடு வருகையில், வயிற்றை அழுத்தினால் கடுமையான நோவோடிருப்பதற்குமிடையில், எத்தனையோ நோய்களின் சாத்தியக் கூறுகள் குறித்து வைத்தியர்கள் சிந்திக்க நேரிடும்.

காய்ச்சலோடு வருகிற உங்களது குருதிப் பரிசோதனை அறிக்கை சாதாரணமாக இருப்பதற்கும், காய்ச்சலோடு வருகிறவர்களின் குருதிப் பரிசோதனை அறிக்கையில் வித்தியாசங்கள் இருப்பதற்குமிடையில் பல தீர்மானங்களை வைத்தியர் மேற்கொள்ள முடியும்.

சில சந்தர்ப்பங்களில் ஆய்வுகூட பரிசோதனைகளின் பெறுபேறுகளைப் பெறக் காலம் தாமதிப்பதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில், உங்கள் வரலாறு மற்றும் உடற்பரிசோதனை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொண்ட ஊகங்களைப் பொறுத்து, நோயறிகுறிகளைக் குறைக்கவும், நோயைக் கட்டுப்படுத்தவும் சில மருந்துகளையும், ஆலோசனைகளையும் வைத்தியர் வழங்கி வைப்பார். ஆய்வுகூட பரிசோதனைகளின் பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்பு, உங்களுக்கான சிகிச்சை அப்பெறுபேறுகளைப் பொறுத்து மாற்றமடையவும் கூடும்.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் பல ஆய்வுகூடப்பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னரும்கூட, சரியான நோய் நிர்ணயமொன்றிற்கு வரமுடியாத சங்கடங்களும் வைத்தியர்களுக்கு ஏற்படுவதுண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் இன்னும் சில அரிதான ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்ளவும், பல விசேட வைத்திய நிபுணர்களை சந்தித்துக் கலந்துரையாடவும் வேண்டி ஏற்படலாம்.

துரதிர்ஷ்டவசமாக மிகச் சில சந்தர்ப்பங்களில், நோயாளி இறந்த பின்னர் கூட அவரது நோய் என்னவெனத் தெரியாது போகும் துர்பாக்கிய நிலையும் ஏற்படுவதுண்டு. அவ்வாறான நிலைமைகளில் Postmortum அவசியமாகும். இன்னும் மிகச்சில சந்தர்ப்பங்களில், எல்லாம் செய்து, நோய் நிர்ணயம் ஒன்றிற்கு வந்த பின்னர்கூட, அந்த நோய்க்கான சிகிச்சை எதுவுமில்லாததால், நோயாளிக்கு உதவமுடியாமல் ஆறுதல்படுத்தப்படுவதுமுண்டு.

அதேபோன்று, எல்லா நோய்களுக்கும் மருந்துகள் வழங்கப்படுவதுமில்லை. பல நோய்களுக்கு மருந்துகள் தேவைப்படுவதில்லை. சாதாரண வைரஸ் காய்ச்சலுக்கும், வலுவான நுண்ணியிர் கொல்லி (Antibiotics) மருந்துகளைக் கேட்டு வாங்கிப் பாவிப்பது, பிற்காலத்தில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கக்கூடும்.

பல காய்ச்சல்களுக்கு, காய்ச்சலைக் கட்டுப்படுத்த மாத்திரம் வெறுமனே பரசிட்டமோல் வில்லைகளைப் பாவிப்பது போதுமானது. எனினும் எந்தக் காய்ச்சலை, எப்படி அணுகுவது என்பது குறித்து வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்வது அவசியமாகும். ஏனெனில் சாதாரண காய்ச்சல்தான் எனக் கவனிப்பாரற்று விடப்பட்ட பல காய்ச்சல்கள் உயிருக்கே ஆபத்தாய் முடிவடைந்ததுமுண்டு.

அதேபோன்று, சில நோய்களுக்கு எவ்வித மருந்துகளுமின்றி, வெறுமனே வைத்திய ஆலோசனைகளைப் பெற்று அதன்படி நடந்துகொள்வது போதுமானதாகும். ஒவ்வொரு மனிதர்களும் தனித்துவமானவர்கள். மனிதர்கள் இயந்திரங்களல்ல. எதைச் செய்வதென்றாலும் மனிதர்களின் உயிருக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் செயற்படவேண்டும். இயந்திரங்களைப்போல மனிதர்களை நிறுத்தி வைத்து, ஆய்வு செய்ய முடியாது.

மருத்துவம் உங்களுக்கு வெளியே தெரிவதைப்போல் இலகுவானதல்ல. ஒரே நோய்க்கு எல்லா மனிதர்களும் ஒரே அறிகுறிகளைக் காண்பிப்பதில்லை. அதேபோன்று, ஒரே அறிகுறிகளைக் கொண்ட எல்லோருக்கும் ஒரே நோயிருப்பதுமில்லை. எனவேதான் சில சந்தர்ப்பங்களில், ஒரே நோயாளிக்கு இரு வேறு நோய் நிர்ணயங்களை இரு வேறு வைத்தியர்கள் மேற்கொள்வதுமுண்டு. இதனால் வைத்தியர்கள் குறைகூறப்படுவதுமுண்டு. எனினும் இருவரின் நிர்ணயங்களும் அவர்களது ஆய்வுகளின் படி சரியானதாய் இருக்கலாம். மேலதிக ஆய்வுகள் தேவைப்பட்டுமிருக்கலாம்.

மருத்துவர்களை அணுகும்போது மனம் விட்டுப் பேசுங்கள். சந்தேகங்களை அந்த இடத்திலேயே கேளுங்கள். மருத்துவர்களை மாயாஜால வித்தைக்காரர்களாக நோக்காமல், ஆய்வாளர்களாக நோக்குங்கள். அப்போதான் மருத்துவத்தில் தெளிவு கிடைக்கும்.

(பைஷல் இஸ்மாயில்)